1981 எப்ரல் 25]

பாதியிலே நிற்கிறது. அதை மீண்டும் அரசு அறநிலையத் துறையின் மூலம் முயற்சி எடுத்து, அங்கே ஒரு நினைவு மண்டபம் எழுப்புவதற்கான முயற்சிகள் இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நினைவு மண்டபம் எழுப்புவதற்கு அரசு செய்தித் துறை மூலம் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அறநிலையத் துறையின் மூலமாக இந்த முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது. அங்கே முதலிலே ஆரம்பித்தவர்கள், பெரிய அளவிலே திட்டமிட்டு, அப்படிச் செலவழிப்பதற்கான முயற்சி எடுத்திருக்கிறார்கள். கற்களைக் கொண்டுவந்து போட்டிருக்கிறார்கள். இந்த கிராமத்து மக்கள் இதிலே தீவிரமாக இருக்கிறார்கள். ஆகவே, எந்த அளவிற்கு அங்கே நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்பதற்கான வரைபடம் கேட்டிருக்கிறோம். அது வந்ததற்குப் பிறகுதான், அறநிலையத் துறை முடிவு செய்யும்.

கன்னியாகுமரியில் சுற்றுலாத்துறை மூலம் நிறைவேற்றப்பெற்ற வளர்ச்சித் திட்டங்கள்.

*வினா எண் 760.—திரு. பி. வின்செண்ட் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) International Tourist Centre ஆக்கப்பட்ட கன்னியாகுமரியில் என்ன என்ன வளர்ச்சித் திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது?

(ஆ) சுமார் 2 மைல் நீளமுள்ள பறக்கை குளத்தை செம்மைப்படுத்தி படகுவிட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இதுவரை கீழ்க்கண்ட வளர்ச்சித் திட்டங்களை சுற்றுலாத் துறையின் மூலம் இம் மாநில அரசு கன்னியாகுமரியில் நிறைவேற்றியுள்ளது :—

1. கன்னியாகுமரியில் ஒரு சுற்றுலா அலுவலகத்தை ஏற்படுத்தியுள்ளது.

2. சுற்றுலா பயணிகளுக்கு ஒரு துயிலக விடுதியை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கேப் விடுதி (Cape Hotel) ஒன்றும் சுற்றுலா மாளிகை ஒன்றும் நடத்தி வருகின்றது.

(ஆ) இத்தகைய திட்டம் எதுவும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அங்கே தங்கும் விடுதி பற்றிய தகவலைச் சொல்லி, இண்டர்நேஷனல் டூரிஸ்ட் செண்டர் ஆக்குவதற்கு மேற்கொண்டு திட்டங்கள் எதுவும் இல்லை என்ற தகவலைத் தந்தார்கள். நீண்ட நாட்களுக்கு முன்னாலே காந்தியடிகள் அஸ்தி வைத்த இடத்தில், ஒரு மணி மண்டபம் கட்டி வைத்திருப்பதைப் போல், காமராஜ் அவர்கள் அஸ்தி வைத்ததன் நினைவாக அங்கே ஒரு பூங்காவும், நினைவு மண்டபமும் எழுப்புவதாகத் திட்டமிருந்தது. அந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியின் இரண்டாவது பகுதிக்குத்தான், அத்தகைய திட்டம் எதுவும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது பகுதி சுமார் இரண்டு மைல் நீளம் உள்ள பறக்கைக் குளத்தில் படகுவிட ஏற்பாடு செய்யப்படுமா என்றால், அதைச் செய்ய இயலாது ; அதற்கு ஏற்ற ஏரியும் அல்ல. ஆனால், இன்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டர் ஆக்கப்பட்ட கன்னியாகுமரியில் என்ற கேள்வியில், அதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது, அதற்காக, இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்குவதற்கு நிபுணர் டாக்டர் டி. கிருஷ்ணசாமி அவர்களை ஒரு மாஸ்டர் பிளான் கேட்டிருக்கிறோம். அவர்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை மத்திய அரசிற்கு அனுப்பும்படி சொல்லியிருக்கிறார்கள். இதை ஒரு சுற்றுலா நகரமாக ஆக்க வேண்டுமென்று மைய அரசோடு நாங்கள் வாதாடிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனைகள் எல்லாம், அந்த மாஸ்டர் பிளான் வந்ததற்குப் பிறகு பரிசீலிக்கப் படும்.

Moore Market

* *Q.*—No. 877.—Thiru S. RAJARAMAN : Will the Hon the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether the Government have received any represent tation in September 1980 from the Moore Market Merchants Association in Madras against the demolition of the Moore market Buildings ?

(*b*) if so, the action taken thereon?